# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 10 | கிறிஸ்தவம் | நேரம்: 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ......................................................................................

மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடம்

**கவனிக்க:**

- எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

### பகுதி – I

01) முழு மனுக்குலத்திற்குமே நற்செய்தியாய் அமைந்த பிறப்பு.

1) திருமுழுக்கு யோவானுடைய பிறப்பு  2) இயேசுவின் பிறப்பு
3) தாவீதின் பிறப்பு  4) ஈசாக்கின் பிறப்பு

02) இயேசுவின் சேவகத்தன்மையைக் குறித்து எத்தியோப்பிய நிதியமைச்சருக்கு விளக்கிக் கூறியவர்.

1) பேதுரு  2) யோவான்  3) பிலிப்பு  4) சவுல்

03) பின்வருவனவற்றுள் திருமுழுக்கு யோவானைக் குறித்த இறைவாக்கு,

1) ஆண்டவரின் பார்வையில் பெரியவராய் இருப்பார்.
2) எலிசாவின் உளப்பாங்கை கொண்டிருப்பார்.
3) அவரது பிறப்பால் பலர் மகிழ்ச்சியடையார்.
4) யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார்.

04) இயேசுவின் பிறப்புச் செய்தி முதலில் அறிவிக்கப்பட்டது.

1) இடையர்களுக்கு  2) பெண்களுக்கு  3) ஞானிகளுக்கு  4) ஏரோதுவிற்கு

05) சிமியோன் என்ற பெயரின் பொருள்,

1) கடவுள் கேட்கின்றார்  2) கடவுள் விடுவிக்கிறார்
3) கடவுளின் கொடை  4) அருட்பொழிவு பெற்றவர்

06) “உங்களுக்கு குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்” என திருமுழுக்கு யோவான் கூறியது.

1) பொதுமக்களுக்கு  2) படைவீரருக்கு
3) அரச பணியில் ஈடுபட்டிருந்தோர்க்கு  4) பரிசேயருக்கு



kalvi.lk

07) திருமுழுக்கு யோவானின் அறிவுரையைப் பின்பற்றும் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறை

1) எந்த காரியத்திலும் உண்மையோடு செயல்பட வேண்டும்.
2) சமூகத்தில் தராதரங்களைப் பார்த்து செயற்பட வேண்டும்.
3) செல்வந்தர்களுக்கு நீதி நியாயத்துடன் பணியாற்ற வேண்டும்.
4) செயல்திறன் மிக்கவர்களாக செயற்பட வேண்டியதில்லை.

08) இயேசு பன்னிரண்டு வயதில் எருசலேம் ஆலயம் சென்றது.

1) பெந்தக்கோஸ்தே விழாவிற்கு
2) கூடாரத்திருவிழாவிற்கு
3) அர்ப்பணிப்பு விழாவிற்கு
4) பாஸ்கா விழாவிற்கு

09) இயேசு சீடர்களைத் தெரிவு செய்வதற்கு முன்பு,

1) தராதரங்களை நோக்கினார்
2) ஜெபித்தார்
3) சீடர்களைச் சந்தித்தார்
4) தொழில்கள் குறித்து ஆராய்ந்தார்

10) எழுபத்திரண்டு சீடர்கள் இவ்விருவராக அனுப்பப்பட்டதன் நோக்கம் அல்லாதது.

1) ஒன்றிணைந்து பணியாற்ற
2) சகோதரத்துவத்துடன் செயல்பட
3) நற்செய்திப் பணி சிறப்பாக இடம்பெற
4) எண்ணிக்கை அதிகரித்ததால்

11) இயேசு மார்த்தா மரியாவை சந்தித்த நிகழ்வின் மூலம் எமக்குத் தரப்படும் செய்தி.

1) விருந்தினர்களை உணவு வழங்கி உபசரிப்பது முக்கியமானது.
2) மார்த்தாவை போன்று பலவற்றை குறித்து சிந்திக்க வேண்டும்.
3) மரியாவைப் போன்று இறைவார்த்தையைக் கேட்க முன்னிற்க வேண்டும்.
4) இறையரசின் வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு அவசியமில்லை.

12) சீடர்களிடையே பெரியோர் யார் என்ற விவாதம் எழுந்த போது இயேசு உதாரணமாகக் காட்டியது.

1) பெண்களை
2) சிறுவரை
3) குருக்களை
4) முதியோரை

13) யூத நீதிச் சட்டங்களை எழுதுவதையும் கற்பிப்பதையும் பணியாகக் கொண்டவர்கள்.

1) சதுசேயர்
2) பரிசேயர்
3) மறைநூலறிஞர்
4) குருக்கள்

14) அனைத்து வேறுபாடுகளையும் களைந்து பிறருக்கு உதவி செய்வதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்த இயேசு கூறிய உவமை.

1) நல்ல சமாரியன்
2) பரிசேயனும் வரிதண்டுபவரும்
3) காணாமல் போன மகன்
4) செல்வந்தரும் இலாசரும்

15) "அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ……. இயேசுவின் இக்கூற்றை நிறைவு செய்யும் வசனம்

1) ஏனெனில், அவர்கள் விண்ணக அரசுக்குள் நுழைவர்.
2) ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்.
3) அவர்கள், கடவுளின் பிரசன்னத்தில் இருப்பர்.
4) அவர்கள் கடவுளை காண்பர்.



kalvi.lk

16) சதுசேயர் ஏற்றுக் கொண்ட விடயமாக அமைவது.

1) வானதூதுர்
2) உயிர்த்தெழுதல்
3) எழுத்துமூல நீதிச்சட்டம்
4) திருமுழுக்கு யோவானின் போதனைகள்

17) "கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று' என இயேசு சதுசேயருக்கு கூறிய சந்தர்ப்பம்,

1) உயிர்த்தெழுதல் குறித்த வினா எழுப்பிய வேளையில்.
2) வரி செலுத்துதல் தொடர்பான வினா எழுப்பிய வேளையில்.
3) அதிகாரம் தொடர்பான வினாவின் பொழுது.
4) திராட்சை தோட்ட குத்தகைக்காரர் உவமையில்.

18) இயேசு எருசலேம் ஆலயத்திற்கு கழுதைக்குட்டியின் மேல் ஏறி சென்றதன் மூலம் வெளிப்படுத்துவது.

1) தாழ்மை
2) வீரம்
3) சமாதானம்
4) அன்பு

19) இறைவனால் இஸ்ராயேல் மக்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்டதை நினைவு கூர்ந்து கொண்டாடும் விழா,

1) கூடாரத்திருவிழா
2) பாஸ்காவிழா
3) பெந்தக்கொஸ்தே விழா
4) ஆலய அர்ப்பண விழா

20) இறுதி திருவிருந்து நிகழ்வின் ஊடாகத் தரப்படும் செய்தி அல்லாதது,

1) இயேசுவின் இரத்தம் ஜென்ம பாவத்தின் விளைவுகளில் இருந்து விடுதலை தருகின்றது.
2) இயேசுவின் துன்புறுத்தலில் பங்குதாரர் ஆகின்றோம்.
3) நாம் திராட்சை இரசத்தை தினமும் பருகுதல் வேண்டும்.
4) சகோதரத்துவத்துடன் நாம் வாழ வேண்டும்.

21) பரிசேயர் குழுவின் பிரதிநிதிகள் எழுபது பேர் அங்கம் வகிக்கும் சபை.

1) ஆதித்திருச்சபை
2) ஆலய நிர்வாக சபை
3) சனகரிம் சங்கம்
4) குருக்கள் மன்றம்

22) இயேசுவைக் காண்பதற்கு மிகவும் ஆவலாக இருந்த அரசன்,

1) பிலாத்து
2) ஏரோது
3) பார்வோன்
4) சவுல்

23) "நீர் கடவுளின் மெசியா" என இயேசுவை பார்த்து அறிக்கையிட்டவர்.

1) யோவான்
2) பிலிப்பு
3) அந்திரேயா
4) பேதுரு

24) சிலுவையில் அறையப்பட்ட இயேசுவிற்கு மனப்பூர்வமாக சான்று பகர்ந்தவர்.

1) உரோமைய நூற்றுவத்தலைவர்
2) சீரேன் ஊர் சீமோன்
3) அரிமத்தியா ஊர் யோசேப்பு
4) படைவீரர்

25) இயேசு உயிரோடிருக்கிறார் எனும் அனுபவத்தைப் பெற எம்மில் தடையாயுள்ள காரணி

1) உயிருள்ளவர் என்பதை விசுவாசித்தல்
2) எமது வாழ்வில் பாவத்திற்கு விலகி வாழ்தல்
3) கடவுளின் திட்டத்தை மறந்து பாவம் செய்தல்
4) உயிர்ப்பை சான்று பகர்தல்



kalvi.lk

26) மனந்திரும்புதலின் அடையாளமாக திருமுழுக்கு யோவான் மக்களுக்கு வழங்கியது.

1) திடப்படுத்தல் 2) திருமுழுக்கு 3) திருவிருந்து 4) திருமணம்

27) இயேசுவின் தோற்றமாறுதலின் பொழுது இடம்பெற்ற சம்பவம்,

1) தூயவியானவர் புறா வடிவில் இறங்கினார். 2) பலத்த காற்று வீசியது
3) வானத்திலிருந்து குரல் ஒலித்தது 4) நெருப்புப் போன்ற நாவுகள் வந்திறங்கியது

28) அலகையின் சோதனைகளை இயேசு வெற்றி கொண்டது.

1) வல்லமையான பேச்சால் 2) விசுவாசத்தால்
3) இறைவார்த்தையால் 4) நம்பிக்கையால்

29) உருமாற்றத்தின் பொழுது இயேசுவுடன் உடன் இருந்த சீடர்கள்.

1) பேதுரு, யாக்கோபு, யோவான் 2) பேதுரு, பிலிப்பு, யோவான்
3) பர்த்தலமேயு, யாக்கோபு, பேதுரு 4) யோவான், அந்திரேயா, பேதுரு

30) மோசே, எலியா என்போர் அடையாளப்படுத்துவது முறையே.

1) நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனமும் 2) தீர்க்கதரிசனமும், நியாயப்பிரமாணமும்
3) பாதுகாப்பும், பராமரிப்பும் 4) தீர்க்கதரிசனமும், இறைவல்லமையும்

31) இறையரசின் வளர்ச்சியானது கண்ணுக்குத் தெரியாத ஓர் அற்புத செயற்பாடு என்பதை எடுத்துக்காட்டும் உவமை.

1) கடுகுவிதை 2) புளிப்புமா 3) விதைப்பவன் உவமை 4) பெரியவிருந்து

32) கிறிஸ்தவ நம்பிக்கையின் அடித்தளம் அமைக்கப்படுவது.

1) தம்மைச்சுற்றி 2) சமுதாயத்தைச் சுற்றி 3) இறைசித்தத்தைச் சுற்றி 4) உலகத்தைச் சுற்றி

33) இயற்கைக்கு மேலான வல்லமைக்கு எடுத்துக்காட்டாய் அமைவது.

1) தொழுநோயாளி குணமடைந்தமை 2) பார்வையற்றவர் பார்வை பெறல்
3) திமிர்வாதக்காரன் நடத்தல் 4) ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல்

34) இயேசுவுடன் நெருங்கிய உறவு கொள்ள எம்மத்தியில் தடையாக அமையும் காரணி.

1) கீழ்ப்படிதல் 2) மனமாற்றம் 3) விசுவாசமின்மை 4) நம்பிக்கை

35) பெரிய விருந்து உவமைவாயிலாக வெளிப்படுத்தப்படும் இறையரசின் கொள்கை.

1) இறையரசு எல்லோருக்கும் திறந்திருக்கிறது.
2) பாவி மனந்திரும்பி வரும் பொழுது இறைவன் ஏற்றுக்கொள்வார்.
3) எல்லா நபர்களும் இறையரசிலே பெறுமதியானவர்கள்
4) கடவுளது அளவில்லா அன்பு


kalvi.lk

36) எந்த வீட்டு வேலையாளும் இரு தலைவருக்குப் பணிவிடை செய்ய முடியாது என்பதை எடுத்துக் காட்டும் உவமை

1) செல்வரும் இலாசரும்
2) அறிவற்ற செல்வன் உவமை
3) வரிதண்டுபவரும் பாவியும் பற்றிய உவமை
4) கடுகுவிதை உவமை

37) பேறுபெறாதோர் என சுட்டிக்காட்டுபவர்களுள் அடங்காதவர்.

1) செல்வர்
2) உண்டு கொழுத்திருப்போர்
3) சிரித்து இன்புறுவோர்
4) ஏழைகள்

38) இறைவனோடு தொடர்பு கொள்ள மிக முக்கிய ஊடகமாக அமைவது.

1) நோன்பு
2) பாடல்கள்
3) இறைவேண்டல்
4) ஆலயங்கள்

39) பத்துத் தொழுநோயாளர் உவமை வாயிலாக வெளிப்படும் முக்கிய பண்பு.

1) நம்பிக்கை
2) பலன் கொடுத்தல்
3) இறைவேண்டல்
4) ஆலயங்கள்

40) இறைவனின் தூதுவர் எனப்படுவோர்.

1) பரிசேயர்
2) லேவியர்
3) சனகரிம் சங்க அங்கத்தினர்
4) இறைவாக்கினார்

(1 x 40 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) சுருக்கமான விடை தருக.

1. பின்வரும் பெயர்களின் பொருளைத் தருக.
   அ) இம்மானுவேல்
   ஆ) மெசியா
2. இறைதிட்டத்திற்கு கீழ்ப்படிந்த இருவரை இயேசு, திருமுழுக்கு யோவான் என்போரின் பிறப்புடன் தொடர்புபடுத்திக் குறிப்பிடுக.
3. யூத சமூகத்தில் குழந்தை பிறந்து எட்டாம் நாள், நாற்பதாம் நாள் இடம்பெறும் சடங்குகள் எவை?
4. இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களுள் வரிவசூலிப்பவராக, தீவிரவாதியாக இருந்தவர்கள் யாவர்?
5. சதுசேயப் பிரிவினர்களிடையே இருந்து தெரிந்தெடுக்கப்படும் இரண்டு விதமான யூத சமய பதவி நிலைகளும் எவை?
6. “என் இல்லம் இறைவேண்டலின் வீடு ஆனால் நீங்கள் இதைக் கள்வர் குகையாக்கினீர்கள்” இக்கூற்று யாரால், எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
7. இயேசு கைது செய்யப்பட்ட பின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட இரண்டு இடங்களைக் குறிப்பிடுக.
8. இறையரசின் கொள்கையை வெளிப்படுத்த இயேசு கூறிய உவமைகள் இரண்டு தருக.

9. இயேசுவின் வாழ்வில் தூயாவியின் செயற்பாடு வெளிப்பட்ட சந்தர்ப்பங்கள் 2 தருக.

10. இறையரசின் அடையாளங்களுள் ஒன்றான அற்புதங்களை எத்தனை வகைப்படுத்தலாம்? அவற்றுள் இரண்டைக் குறிப்பிடுக.

(2 x 10 = 20 புள்ளிகள்)

02) 1. இயேசு எத்தனையாவது வயதில், எங்கு தமது பகிரங்கப்பணியை ஆரம்பித்தார்?

2. நாசரேத்து அறிக்கையில் இயேசுவின் பணியாகக் குறிப்பிப்படுகின்ற விடயங்கள் 3 தருக.

3. இன்றைய சமூகத்தில் விடுதலையை எதிர்பார்த்திருக்கும் பிரிவினர் யாவர்? அவர்களுக்கு கிறிஸ்தவன் எனும் வகையில் நீர் எத்தகைய உதவிகளை மேற்கொள்வீர். ஒவ்வொரு பிரிவினர்க்கும் ஒரு கருத்து வீதம் 5 கருத்துக்களை முன்வைக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

03) 1. சமய பாரம்பரியங்களையும் திருச்சட்டங்களையும் பின்பற்றிய யூதர்களில் பிரதானமாக செயற்பட்ட இரு பிரிவினர்களும் யாவர்?

2. திருச்சட்டத்தின் மையம் அன்பு என்பதை வெளிப்படுத்த இயேசு செய்த அற்புதங்கள் 3 தருக.

3. பரிசேயர் நடந்து கொண்ட முறைகளைக் கண்டித்த இயேசுவின் செயற்பாடுகளைப் பின்பற்றி சமுதாயத்தில் கிறிஸ்தவர்களாக நாம் செயற்படக்கூடிய ஐந்து வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04) 1. இறையரசின் வளர்ச்சியை எடுத்துக்காட்ட இயேசு கூறிய உவமைகள் 2 தருக.

2. இறையரசிற்கும், உலக அரசிற்கும் இடையிலான வேறுபாடுகள் 3 தருக.

3. இறையரசின் வளர்ச்சிக்கு கிறிஸ்தவராகிய நீர் எவ்வாறு செயலாற்றுவீர் என்பதைக் குறித்து 5 கருத்துக்கள் முன்வைக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05) 1. எனது அயலவன் யார்? என இயேசுவிடம் வினவியவர் யார்? அவ்வினாவிற்கு இயேசு கூறிய உவமை யாது?

2. இறையரசின் பிரஜையிடம் இருக்க வேண்டிய குணாதியங்கள் 3 தருக.

3. இயேசு முன்வைத்த தலைமைத்துவ அமைப்பு இன்றைய உலகியல் தலைமைத்துவ அமைப்பிலிருந்து முற்றாக வேறுபட்டுள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டுகள் 5 தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)



kalvi.lk

06) 1. இயேசுவில் வெளிப்பட்ட மனிதப் பண்புகள் எவை?

2. இயேசு மரணிக்கும் வேளையில் இயற்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?

3. இன்று பல சவால்களையும் எதிர்நோக்கும் கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுவின் சிலுவை மரணத்திலிருந்து பெறக்கூடிய வழிகாட்டல்கள் எவை?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்புத் தருக.

1. கெத்மனி வேண்டுதல்.
2. இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகள்.
3. ஆண்டவரின் இறுதி திருவிருந்து.

(5 x 2 = 10 புள்ளிகள்)

LMDMUnit Education கல்வி අධ්‍යාපන


kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி Kalvi.lk

Whatsapp
**075 287 1457**